**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM**
**DATE: 21.11.2022**

**Case No : CC 32 / 2017**

**Deposition of Witness : P.W. 1**

| | |
|---|---|
| **Name:** ஜெரின் | **Caste:** |
| **Husband / Father Name:** அற்புதகொடிராஜன் | **Calling:** |
| **Village:** திருநெல்வேலி | **Religion:** |
| **Taluk:** | **Age: 53** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 21.11.2022**

முதல் விசாரணை:

நான் திருநெல்வேலியில் குடியிருந்து தற்போது காரைக்குடி இந்தியன் வங்கி மண்டல அலுவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 29.5.2014ம் தேதி நான் படுக்கப்பத்து இந்தியன் வங்கியின் கிளை மேலாளராக பணியிலிருந்தபோது மதியம் 3.00 மணியளவில் உடன்குடியிலுள்ள தமிழ்நாடு மெர்க்கண்டைல் பேங்கிலிருந்து ரூ.10 லட்சம் பணம் வங்கிக்காக எடுத்துக்கொண்டு நானும் என் பியூன் முத்துபாண்டியும் எங்கள் படுக்கப்பத்திலுள்ள வங்கி முன்பாக வாகனத்திலிருந்து இறங்கி வாசலில் நான் முன்பாக சென்றேன் முத்துப்பாண்டி என்பவர் பணப்பெட்டியுடன் பின்னால் வந்தார். அப்போது எதிரிகள் இருவரும் இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். பைக் ஓட்டிய நபர் பைக்கில் அமர்ந்திருக்க பின்னால் இருந்த நபர் இறங்கி வந்து மிளகாய் பொடியை முத்துப்பாண்டி என்பவர் கண்ணில் வைத்து அப்பி விட்டு அவர் கையிலிருந்த பணப்பெட்டியை பிடுங்க முயற்சி செய்தார். அப்போது முத்துப்பாண்டி சத்தம் போட்டார். பணப்பெட்டி எதிரி பணப்பெட்டியை பிடுங்கியதால் பணப்பெட்டி வார் அறுந்து பணப்பெட்டி எதிரி கையில் சிக்கியது சம்பவத்தை பார்த்த நான் ஓடிச்சென்று எதிரிகளிடமிருந்து பணப்பெட்டியை கைப்பற்றிவிட்டு வங்கிக்குள் ஓடினேன். சத்தம் கேட்டு அங்கிருந்தவர்கள் எதிரியை பிடித்து விட்டார்கள். வாகனத்தை

ஓட்டி வந்த மற்றொரு எதிரி தப்பிவிட்டார். நான் என் மேல் அதிகாரிகளிடம் நடந்த சம்பவத்தை கூறி அவர்களின் அறிவுறுத்தலின்பேரில் காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். பிடிபட்ட எதிரியை ஊர்மக்கள் காவல்நிலையத்தில் ஒப்படைத்தார்கள். அந்த நபர் அயன்சிங்கம்பட்டியை சேர்ந்த பாலகுமார் என்பவர் ஆவார். பணப்பெட்டி மற்றும் அறுந்துபோன வாரை காவல்நிலையத்தில் ஒப்படைத்தோம். பணம் வங்கியிலுள்ள கடன்தாரருக்கு சொந்தமானதால் அதை வங்கியில் ஒப்படைத்தோம். அடிபட்ட முத்துப்பாண்டியை அருகிலுள்ள மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். இதுசம்பந்தமாக நான் காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

வழக்கறிஞர் இருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Taken down by me in the open court to the presence of the Accused Read over to the witness and admitted by him to be correct.

(Sd)Tmt.C.Kalaiyarasi Reena
Judicial Magistrate,
Sathankulam.